## கடலூர் கிழக்கு மாவட்டம்

# குறிஞ்சிப்பாடி - காட்டுமன்னார்கோயில், புவனகிரி, சிதம்பரம் தொகுதி மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

### அமைச்சர் எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம் அறிவிப்பு!



கழக தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களின் ஆணைக்கிணங்க, கழக இளைஞர் அணி செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் அறிவுறுத்தலின்படி, கடலூர் கிழக்கு மாவட்டத்தில் உள்ள குறிஞ்சிப்பாடி, புவனகிரி, காட்டுமன்னார்கோயில், சிதம்பரம் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில், மதசார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் தொகுதி செயல்வீரர்கள் கூட்டம் கீழ்கண்ட பட்டியலில் உள்ளவாறு நடைபெற உள்ளது.

| வ. எண் | தேதி/நேரம் | சட்டமன்ற தொகுதி | கூட்டம் நடைபெறும் இடம் | கலந்து கொள்ளும் ஒன்றியம்/ நகரம்/ பேரூர் |
|---|---|---|---|---|
| 1 | 04/04/2026 சனிக்கிழமை காலை 09.00 மணி | குறிஞ்சிப்பாடி தொகுதி | பத்மாவதி திருமண மண்டபம், அண்ணா நகர், குறிஞ்சிப்பாடி | குறிஞ்சிப்பாடி தெற்கு ஒன்றியம், குறிஞ்சிப்பாடி வடக்கு ஒன்றியம், கடலூர் கிழக்கு ஒன்றியம், கடலூர் மேற்கு ஒன்றியம், வடலூர் நகரம், குறிஞ்சிப்பாடி பேரூர் |
| 2 | 04/04/2026 சனிக்கிழமை மதியம் 02.00 மணி | புவனகிரி தொகுதி | KKS திருமண மண்டபம், பூதங்குடி, சேத்தியாதோப்பு | கம்மாபுரம் தெற்கு ஒன்றியம், கம்மாபுரம் வடக்கு ஒன்றியம், கம்மாபுரம் மத்திய ஒன்றியம், கெங்கைகொண்டான் பேரூர், திருமுட்டம் வடக்கு ஒன்றியம், புவனகிரி கிழக்கு ஒன்றியம், புவனகிரி மேற்கு ஒன்றியம், புவனகிரி மத்திய ஒன்றியம், புவனகிரி பேரூர், சேத்தியாதோப்பு பேரூர், கீரப்பாளையம் கிழக்கு ஒன்றியம், கீரப்பாளையம் மேற்கு ஒன்றியம், கீரப்பாளையம் மத்திய ஒன்றியம் |
| 3 | 04/04/2026 சனிக்கிழமை மாலை 04.00 மணி | காட்டுமன்னார் கோயில் தொகுதி | லலிதா மஹால், காட்டுமன்னார் கோயில் | காட்டுமன்னார்கோயில் மேற்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் கிழக்கு ஒன்றியம், காட்டுமன்னார்கோயில் பேரூர், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், திருமுட்டம் பேரூர், திருமுட்டம் கிழக்கு ஒன்றியம், குமராட்சி தெற்கு ஒன்றியம், குமராட்சி வடக்கு ஒன்றியம், குமராட்சி மேற்கு ஒன்றியம், லால்பேட்டை பேரூர் |
| 4 | 05/04/2026 ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணி | சிதம்பரம் தொகுதி | கார்த்திகேயன் திருமண மண்டபம், இளமையாக்கினார் கோயில் தெரு, சிதம்பரம் | சிதம்பரம் நகரம், பரங்கிப்பேட்டை வடக்கு ஒன்றியம், பரங்கிப்பேட்டை மேற்கு ஒன்றியம், பரங்கிப்பேட்டை தெற்கு ஒன்றியம், பரங்கிப்பேட்டை பேரூர், கிள்ளை பேரூர், குமராட்சி கிழக்கு ஒன்றியம், குமராட்சி மத்திய ஒன்றியம், அண்ணாமலைநகர் பேரூர் |

அதுசமயம் கடலூர் கிழக்கு மாவட்டத்தை சேர்ந்த மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், ஊராட்சி மற்றும் கிளை, வார்டு கழக செயலாளர்கள், பிரதிநிதிகள் மற்றும் நிர்வாகிகள், முன்னாள், இந்நாள் சட்டமன்ற, நாடாளுமன்ற உறுப்பினர்கள், தலைமை செயற்குழு, பொதுக்குழு உறுப்பினர்கள், முன்னாள், இந்நாள் உள்ளாட்சிப் பிரதிநிதிகள், முன்னாள் ஊராட்சி ஒன்றியக்குழு தலைவர்கள், ஊராட்சி மன்றத் தலைவர், துணைத் தலைவர்கள், முன்னாள் மாவட்டக்குழு, ஒன்றியக்குழு ஊராட்சி மன்ற உறுப்பினர்கள், உள்ளாட்சி அமைப்பு முன்னாள் பிரதிநிதிகள், கழக தோழர்கள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சிகளின் நிர்வாகிகள் மற்றும் தோழர்கள் அனைவரும் பெருந்திரளாக அவரவர் பகுதிகளில் கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

அமைச்சர் **எம்.ஆர்.கே.பன்னீர்செல்வம்**
செயலாளர், கடலூர் கிழக்கு மாவட்ட தி.மு.க.

# சேலத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி செயல்வீரர்கள் கூட்டம்!

## அமைச்சர் இரா.இராஜேந்திரன் பேச்சு!

*சேலம், ஏப். 4 -*

*சேலத்தில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சிகளின் செயல்வீரர்கள் கூட்டத்தில் மத்திய மாவட்டக் கழகச் செயலாளர் - அமைச்சர் இரா.இராஜேந்திரன் கலந்து கொண்டு பேசியதாவது:-*

*தமிழகத்தில் எண்ணற்ற திட்டங்களை நிறைவேற்றிய அற்புதமான முதல்வர் மற்ற மாநிலங்கள் வியந்து பாராட்டும் வகையில் ஆட்சியை நடத்தி வருகிறார்.*

*மற்ற மாநிலங்களின் முதல்வர்கள் நமது முதல்வரின் திட்டங்களை வியந்து பாராட்டும் வகையில் ஆட்சியை நடத்தி வருகிறார். குறிப்பாக பள்ளி மாணவர்களுக்கான காலை உணவு திட்டத்தை பிற மாநிலங்கள் மட்டும் இல்லாமல் இங்கிலாந்து உள்ளிட்ட வெளி நாடுகளின் பிரதமர்களும் பாராட்டுகின்றனர்.*

*நமது முதல்வர் வெளியிட்ட தேர்தல் அறிக்கை சூப்பர் ஹீரோ. அடுத்த 5 ஆண்டுகளில் 10 லட்சம் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு இல்லத்தரசிகளுக்கு ரூ.8 ஆயிரம் கூப்பன் உள்ளிட்ட திட்டங்களை அறிவித்துள்ளார்.*

*நமது கூட்டணி கொள்கை கூட்டணி. எதிர்க்கட்சி கூட்டணி மதவெறி கூட்டணி. ஆகவே சேலம் மாவட்டத்தில் உள்ள 11 சட்டமன்றத் தொகுதிகளிலும் தி.மு.க. கூட்டணி வெற்றி பெறும். உறுதியாக வெற்றி பெறுவோம். செயல்வீரர்கள் ஒவ்வொரு வீடு வீடாகச் சென்று அனைத்துத் தரப்பினரையும் சந்தித்து நமது திட்டங்களை எடுத்துக் கூறி ஆதரவு திரட்ட வேண்டும் குறிப்பாக 18 - 25 வயதுள்ள இளைஞர்கள் பெண்கள் சினிமா மாயையில் உள்ளனர். அது மின்னல் போல் மறையக் கூடியது.*

*இதை நம்பி ஏமாற வேண்டாம் மக்களுக்காக உழைக்கும் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணிக்கு ஆதரவு அளிக்க கோரி வாக்குகளை சேகரிக்க வேண்டும் மேற்கண்டவாறு அவர் பேசினார்.*

*மேற்கு மாவட்டக் கழகச் செயலாளர். டி.எம்.செல்வகணபதி எம்.பி., மாவட்ட நிர்வாகிகள் ஜி.கே.சுபாசு, மு.கார்த்திகேயன், தலைமைச் செயற்குழு சி.ராஜேந்திரன், கே.டி.மணி, தாமரைக் கண்ணன், மாநகரச் செயலாளர் பா.ரகுபதி, தொகுதி பார்வையாளர்கள் பி.ஏ.ஆர். இளங்கோவன் ஈ.ஜி. சுகவனம், டாக்டர் விவேக் ராஜசேகர் மற்றும் கூட்டணிக் கட்சியின் நிர்வாகிகள், வேட்பாளர்கள் கலந்து கொண்டனர்.*

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### என்.எஸ்.மணி
### ஏப்ரல் 4 (1994)



**கழகம் தொடங்கிய நாளிலிருந்தே, உறுப்பினராகி தனது கிராமப்புறப் பகுதியில் கழகத்தை வளர்த்தவர்.**

**உத்திரமேரூர் ஊர்கிளைச் செயலாளர், வட்டச் செயலாளர், ஒன்றியச் செயலாளர் என பல்வேறு பொறுப்புகளை வகித்தவர்.**

**பதினான்கு ஆண்டுகள் உத்திரமேரூர் பேரூராட்சி மன்றத் தலைவராக தேர்ந்தெடுக்கப்பட்டு, பணியாற்றி அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.**

**விலைவாசி உயர்வு எதிர்ப்பு போராட்டம், இந்தித் திணிப்பு எதிர்ப்பு போராட்டம் என கழகம் அறிவித்த போராட்டங்களில் கலந்து கொண்டு சிறை சென்றவர்.**

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

# தமிழ்நாடு என்றும் ‘தளபதி’யின் கோட்டை!



எடப்பாடி பழனிசாமி “விவசாயி முதல்வராவது அ.தி.மு.க.வில் தான்” என்கிறார்.. விவசாயி தான் முதல்வராக வேண்டுமென்றால் அறிஞர் அண்ணாவும், எம்.ஜி.ஆரும், ஜெயலலிதாவும் முதல்வரானது தவறு என்று எடப்பாடி கூறுகிறாரா?

ஸ்டாலின் கூப்பன் அறிவிப்பு கமிஷனுக்குத் தானாம், மக்கள் ஏமாற மாட்டார்களாம். எடப்பாடி கூறுகிறார். 20 ரூபாய் கூப்பனைக் கொடுத்து ஏமாற்ற இது ஆர்.கே.நகர் தேர்தலும் அல்ல, கூப்பனைக் கொடுத்தவர் உமது இன்றைய நண்பர் தினகரனும் அல்ல.

நீர் ஆட்சி செய்த போது கொரோனாவுக்காக கொடுக்க வேண்டிய 5,000-த்தில் 1,000 மட்டுமே கொடுத்தீர். மீதி 4,000/த்தை கொடுத்தவர் தளபதி. உமக்காக 2 கோடி ரேஷன் கார்டுகளுக்கு தலா 4000 வீதம் 8,000 கோடி கொடுத்தவருக்கு 8000 ரூபாய்க்கு கூப்பன் கொடுக்கத் தெரியாதா.

சொல் உயர்ந்ததாக இருந்தாலும், சொல்கின்றவர் யார் என்பதே முக்கியம்.

கடந்த தேர்தலில் மகளிர் உரிமைத்தொகை 1,000 ரூபாய் தருவதாக தளபதி கூறினார். ஆனால் எடப்பாடி 1500 ரூபாய் தருவதாக கூறினார். தளபதி சொல்லே மந்திரம் என தளபதியை மக்கள் நம்பினார்கள். அதைப்போலத்தான் 8000 ரூபாய் கூப்பனையும் நம்புவார்கள்.

அ.தி.மு.க.வில் உழைத்தால் உயர்ந்துவிடலாம் என எடப்பாடி கூறுகிறார். உயர்வு வந்தால் ஏன் தி.மு.க.விற்கும், த.வெ.கா.வுக்கும் அ.தி.மு.க.வினர் ஓடுகின்றனர். கட்சி வேட்டி கூட கட்டக்கூடாது எனக் கோர்ட்டில் தடை வாங்கும் அவலம் தி.மு.க.வில் இல்லை.

எடப்பாடியும், தினகரனும் இன்று ஒன்றுசேர்ந்து சிரிக்கிறார்கள். உங்கள் சண்டையில் 18 பேருக்கு எம்.எல்.ஏ. பதவி இரண்டு ஆண்டுகள் போனது. இந்த 18 பேரின் குடும்பங்களுக்கு குறைந்தபட்சம் இரண்டு ஆண்டு சம்பளமாவது கொடுத்தீர்களா? கொடுப்பீர்களா? அவர்களுக்கு என்ன பதில்?

எடப்பாடி உழைத்ததற்காக முதல்வர் ஆனவர் இல்லை. தரையில் உருண்டு சசிகலா காலைப் பிடித்ததற்காக முதல்வர் ஆனவர்.

இன்று நீர் தினகரனுடன் சேர்க்கின்ற அளவு தன்னை வளர்த்துக் கொள்ள காரணமாக இருந்த தினகரனின் சின்னம்மா என்னவானார்கள்?

**கொரோனா நேரத்தில் எடப்பாடி உழைத்தாராம். கிட்ஸ் வாங்கியதில் ஊழல், பிளீச்சிங் பவுடரில் ஊழல், முகம் உறையில் ஊழல், கை உறையில் ஊழல், வாங்கிய தடுப்பூசிகளை திருப்பிக் கொடுங்கள் என டெல்லி உயர்நீதிமன்றம் உத்தர விட்டதையும்,**

**கொரோனாவை ஒழிக்க பிரதமருடன் அ.தி.மு.க.வினர் மணி விளக்கு ஏற்றியதையும் மறைத்துவிட்டு நம்மிடம் அடித்ததையும் பேசுகிறார்கள்.**

**“ஐ.ஏ.எஸ். அதிகாரிகளிடம் வேலை வாங்குவதற்கு தகுதி வேண்டும் அந்தத் தகுதி தளபதியிடம் இல்லை” – என்கிறார் எடப்பாடி.**

**ஐ.ஏ.எஸ். அதிகாரிகளை வைத்துக்கொண்டு தான் “காலை உணவு திட்டம், தாயுமானவர் திட்டம், கருப்பையில் வாயிலேயே ஊசி போட்டிடும் திட்டம்” என தினசரி சூரியன் வருகிறதோ இல்லையோ, புதிய புதிய திட்டங்கள் கொண்டு வந்தார் தளபதி.**

2016- 2021-ல் 18 எம்.எல்.ஏ. களை உறுப்பினர் பொறுப்பில் இருந்து நீக்கி, எடப்பாடி ஆட்சியை கவிழவிடாமல் தடுத்த சட்டப்பேரவைத் தலைவர் தனபாலின் நிலை அ.தி.மு.க.வில் இப்போது என்ன?

அனைத்து ஜாதியினரும் ஒதுக்கி வைத்த, தாழ்த்தப்பட்ட சாதியினரான தனபாலை கண்டு, அனைத்து சாதியினரும் எழுந்து நிற்க வாய்ப்பு வழங்கியவர் ஜெயலலிதா என்கிறீர்களே - இப்போது ஜெயலலிதா வழங்கிய வாய்ப்பை நீங்கள் எடுக்கலாமா? அவர் ஆத்மா இருந்தால் உங்களை மன்னிக்குமா?

அன்று ஜெயலலிதா, விமானத்தில் ஏறவிடாமல், தாழ்த்தப்பட்ட சமுதாயத்தை சேர்ந்த ஒன்றிய அமைச்சர் அருணாசலத்தைக் கழட்டிவிட்டார். இன்று சட்டப் பேரவைத் தலைவர் சபாநாயகர் என உயர்ந்த பொறுப்பில் அமர வைத்த தாழ்த்தப்பட்ட சமூகத்தைச் சேர்ந்த தனபாலை எடப்பாடி கழட்டிவிட்டார்.

முன்னாள் பேரவைத் தலைவர் காளிமுத்துவின் மறு தோற்றமாய், இலக்கிய நடையில் பேசி உயர்ந்த முன்னாள் அமைச்சர் வைகைச் செல்வனுக்கு சீட்டு இல்லை. முத்தரையர் சமுதாயத்தினரை அவமதிக்கும் வகையில் முத்தரையர் சமுதாய சிவபதி, வளர்மதிக்கு சீட்டு இல்லை. ‘கொண்டா கோடி இல்லை எனில், போய் விடு, தேர்தல் களத்தை விட்டு ஓடி’ என தாடி வைக்காத மோடியாக மிரட்டுகிறார் எடப்பாடி.

‘ஜெயலலிதாவின் விரல்களில் “ஈ” மொய்த்தால் எங்கள் விழிகளில் முள் குத்தியது போல துடிப்போம்’ என்றார் காளிமுத்து. ஆனால் இன்று ஐதராபாத்தில் ஜெயலலிதா வாழ்ந்த அவருக்குச் சொந்தமான கட்டிடத்திற்கு 82.91 லட்சம் சொத்துவரி பாக்கி என ஐதராபாத் மாநகராட்சி அதிகாரிகள் கட்டிடத்திற்கு சீல் வைத்து விட்டார்கள். அந்தத் தொகையை அ.தி.மு.க. வங்கி இருப்பு கணக்கிலிருந்து கட்டாமல் எடப்பாடி வேடிக்கை பார்ப்பதுதான் விசுவாசமா?

விஜய் ஏன்டா நம்பிக்கை இல்லாமல் இரண்டு தொகுதிகளில் போட்டியிடுகிறார் என்று கேட்டால், உங்கள் இளைய தளபதி, உதயநிதி மட்டும் இரண்டு தொகுதியில் நிற்கலாமா என கேட்கும் த.வெ.க. நிர்வாகிகளை தற்குறி என்று கூறாது வேறு எப்படி அழைப்பது?

உதயநிதி, “சேப்பாக்கம் - திருவல்லிக்கேணி” என இரண்டு தொகுதியில் நிற்கிறாராம். என்ன அறிவு? அது ஒரே தொகுதி என்பது கூட தெரியவில்லை.

தளபதியை “முன்னாள் முதல்வர்” என ஆதவ் கூறுகிறார். தேர்தல் முடிந்து, வாக்கு எண்ணிக்கை முடிந்து தான் புது முதல்வர். அந்த நிமிஷம் வரை இப்போது முதல்வராக இருப்பவர்கள் “காபந்து முதல்வர்” என்று தான் அழைக்கப்படுவார்.



கவிஞர்
**காசிமுத்து மாணிக்கம்**
(கழக வர்த்தகர் அணிச் செயலாளர்)

200 போலீசாரை இறக்கி, பக்காவாய் பாதுகாப்பு கொடுத்தும் ஏன் வில்லிவாக்கம் கூட்டத்தை ரத்து செய்தார் விஜய். எதிர்பார்த்த கூட்டம் இல்லை. ஏசி இல்லாமல் வெயிலில் விஜய்க்கு வாக்கு கேட்க விருப்பம் இல்லை.

இதில் எதற்கு தி.மு.க. அதிகாரி என திட்டுவது. நீ என்ன மூடனா, முட்டாளா.

தேர்தல் விதி அமலுக்கு வந்த பின் ஒன்றிய அரசின் கைப்பாவையாக செயல்படும் தேர்தல் ஆணையத்தைத் தானே திட்ட வேண்டும். இதில் எங்கே வந்தது தி.மு.க.? பா.ஜ.க.வை திட்டி பழக்கம் இல்லை. அதனால் திட்டவில்லை.

விஜய் அறிவித்த வேட்பாளர்கள் பாதிக்கும் மேற்பட்டோர் ரசிகர் மன்றத்திற்கே தொடர்பு இல்லாதவர்கள். விஜய் கட்சியினர் மொத்தம் 133 மாவட்ட கழக செயலாளர்களில், 61 மாவட்ட கழக செயலாளர்களுக்கு இந்த முறை சீட்டு இல்லை.

109 பேர் மாற்றுக் கட்சியினர். தேர்தலுக்காக சேர்ந்தவர்கள்.

நேர்காணல் இல்லாமல், வேட்பாளர் தேர்வு நடத்தாமல் நேரடி நியமனம்.

இந்த முறை தேர்தல் சம்பந்தமான கூட்டங்களுக்கும் பிரசாரங்களுக்கும் ஆன்லைனில் விண்ணப்பிக்க வேண்டும். விண்ணப்பித்த இடைவெளி 48 மணி நேரம் வேண்டும் என்பது தேர்தல் விதி. அது கூடத் தெரியாதவன் சட்டமன்ற உறுப்பினராக ஆசைப்படலாமா?

**அருகம் புல்லை வீழ்த்தத் தெரியாதவன், ஆலமரத்தை வீழ்த்தப் புறப்பட்டானாம், கூட்டத்திற்கு அனுமதி பெறத் தெரியாதவன் ஒன்றிய உள்துறை செயலாளருக்கும், மணிப்பூர் கவர்னருக்கும் வித்தியாசம் தெரியாதவன் கோட்டைக்குப் போக ஆசைப்பட்டானாம், ஆசைப்பட்டாலும் தமிழ்நாட்டு மக்களிடம் எடுபடாது.**

தமிழ்நாடு என்றும் தளபதியின் கோட்டை
தளபதி இன்று செயிண்ட் ஜார்ஜ் கோட்டை
நாளை செங்கோட்டை!



கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி சட்டமன்றத் தொகுதி கழக வேட்பாளர் மொஞ்சனூர் ஆர்.இளங்கோ, சேந்தமங்கலம் மேல் பாகம், இனுங்கனூர், சாந்தப்பாடி ஊராட்சிகளில் கிராமம் கிராமமாகச் சென்று உதயசூரியன் சின்னத்திற்கு வாக்குச் சேகரித்தார்.